

கடலூர் மேற்கு மாவட்டக் கழக செயற்குழு கூட்டம், நெய்வேலி தொ.மு.ச. அலுவலகத்தில், மாவட்ட கழக அவைத் தலைவர் டாக்டர் கொ.நந்தகோபாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட கழக செயலாளர், திட்டக்குடி சட்டமன்ற உறுப்பினர் சி.வெ. கணேசன் சிறப்புரையாற்றினார். கழக ஆதிதிராவிடர் நலக்குழு துணைசெயலாளர் செ.புஷ்பராஜ், ஆர்.எஸ் எம்.தணிகைசெல்வம், ஆனந்தி சரவணன், வி.கே.வெங்கட்ராமன், எம்.எஸ்.கணேஷ்குமார் உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் வடக்கு மாவட்டம் தீவனூரில் நடைபெற்ற மயிலம் சட்டமன்றத் தொகுதி திமுக நிர்வாகிகள் கலந்து கொண்ட ஆலோசனை கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் சிறப்புரையாற்றினார். உடன் ஆரணி எம். எஸ். தரணிவேந்தன் எம்.பி., மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேது நாதன், ஒன்றிய பெருந்தலைவர்கள் மயிலம் யோகேஸ்வரி மணிமாறன், வல்லம் அமுதாரவிக்குமார் உள்ளிட்ட நிர்வாகிகள் உள்ளனர்.

# கோவை மாநகர் மாவட்ட தி.மு.கழக செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டக் கழகப் பொறுப்பாளர் துரை.செந்தமிழ்ச் செல்வன் அறிக்கை!

கோவை, மே 23-

கோவை மாநகர் மாவட்டச் செயலாளர் துரை.செந்தமிழ்ச் செல்வன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கோவை மாநகர் மாவட்ட தி.மு.கழக செயற்குழு கூட்டம் இன்று (23.05.2026-சனிக்கிழமை) காலை 9.30 மணியளவில், வடகோவை குறுக்கு வெட்டு சாலையில் அமைந்துள்ள "மாவட்ட கழக அலுவலகத்தில்" கோவை மாநகர் மாவட்ட அவைத்தலைவர், கோவை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் கணபதி ப.ராஜ்குமார் அவர்கள் தலைமையில், மேற்கு மண்டல பொறுப்பாளர், கோவை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி அவர்கள் முன்னிலையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கோவை மாநகர் மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், தலைமை கழக நிர்வாகிகள், மாநகராட்சி மேயர், பகுதி கழக, வட்டக் கழக பொறுப்பாளர்கள், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் பங்கேற்க வேண்டும் என்று தங்களை கேட்டு கொள்கிறேன்.

பொருள்:

முத்தமிழறிஞர், செம்மொழி காவலர் கலைஞர் அவர்களின் அவர்களின் பிறந்தநாள் விழா! நடைபெற்ற முடிந்த 2026 சட்டமன்றத் தேர்தல்கள ஆய்வு குறித்து ஆலோசனை. கழக ஆக்க பணிகள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### ஆட்சி மாற்றத்தால் காட்சிகள் மாறும் அபாயம்! 20 ஆண்டுகாலக் காத்திருப்பு வீண்!

# திருப்பூரில் 95 சதவிகித பணிகள் முடிந்தும் - முடங்கும் மேம்பாலப் பணிகள்!

திருப்பூர், மே 23-

ஆட்சி மாற்றத்தால் காட்சிகள் மாறும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது. 20 ஆண்டு கால காத்திருப்பு வீண், திருப்பூரில் 95% மேம்பால பணிகள் முடிந்தும் முடங்கும் நிலையில் உள்ளது.

திருப்பூர் மாநகரில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் போக்குவரத்து நெரிசலுக்கு தீர்வு காணும் வகையில் கடந்த 2006ம் ஆண்டு நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சியில் மங்கலம் சாலையிலிருந்து அணைப்பாளையம், கல்லூரி சாலை வழியாக சிறுபூலுவபட்டி பகுதியை இணைக்கும் வகையில் நொய்யல் ஆற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம், ரயில் தண்டவாளத்தின் குறுக்கே மேம்பாலம் கட்ட திட்டமிடப்பட்டது.

இந்த திட்டத்திற்காக ரூ.6.50 கோடி மதிப்பீடு செய்யப்பட்டது. நிலம் கையகப்படுத்துவதில் ஏற்பட்ட பல்வேறு சட்ட போராட்டங்கள் மற்றும் நீதிமன்ற வழக்குகள் காரணமாக இந்த திட்டம் நீண்ட காலம் கிடப்பில் போடப்பட்டது.

இதனைத்தொடர்ந்து கடந்த 2017ம் ஆண்டு நடைபெற்ற அ.தி.மு.க. ஆட்சியில் திட்ட மதிப்பீடு ரூ.19.29 கோடியாக உயர்த்தப்பட்டு, மீண்டும் கட்டுமான பணிகள் விறுவிறுப்பாக தொடங்கின. அதன் படி, நொய்யல் ஆற்றின் குறுக்கே உயர்மட்ட பாலமும், ரயில் வழித்தடத்தின் குறுக்கே மேம்பாலமும் கட்டி முடிக்கப்பட்டாலும், இந்த மூன்றையும் இணைக்கும் இறுதி கட்ட இணைப்புச்சாலை பணிகள் மட்டும் தொடர்ந்து இழுபறியாகவே நீடித்து வந்தன.

கழகத் தலைவர், முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆட்சி அமைந்த உடன் மேற்கொள்ளப்பட்ட தொடர் நடவடிக்கைகள் காரணமாக 2024ம் ஆண்டு பாலம் கட்டுமான பணிக்கான நிலம் எடுப்பு தொடர்பான அனைத்து வழக்குகளையும் நீதிமன்றம் தள்ளுபடி செய்து நெடுஞ்சாலை துறைக்கு சாதகமாக தீர்ப்பு

வழங்கியது. இதனைத் தொடர்ந்து விடுபட்ட பணிகளை விரைந்து நிறைவு செய்ய கூடுதலாக ரூ.22 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கடந்த சில மாதங்களாக பணிகள் நடைபெற்று வந்தன. நொய்யல் ஆற்றின் மேலே உயர்மட்ட மேம்பாலம், ரயில் தண்டவாளத்தின் மேல் கட்டப்பட்ட மேம்பாலத்துடன் இணைப்பு சாலைகள் இணைக்கப்பட்டு சிறுபூலுவப்பட்டியை இணைக்கக்கூடிய பகுதியில் மட்டும் சில பணிகள் கிடப்பில் உள்ளது. 95 சதவீத பணிகள் முழுமை அடைந்துள்ளது. கல்லூரி சாலை ஏறத்தாழ 95 சதவீத பணிகள் முடிந்து விரைவில் பொதுமக்களின் பயன்பாட்டிற்குவரும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், தற்போதைய ஆட்சிமாற்றம் காரணமாக மீதமுள்ள 5 சதவீத பணிகள் எவ்வித முன்னேற்றமும் இன்றி திடீரென கிடப்பில் போடப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. இதனால் 20 ஆண்டு கால காத்திருப்பு வீணாகுமோ? என்ற அச்சம் நிலவுகிறது. உடனடியாக முடித்து பயன்பாட்டிற்கு கொண்டு வரும் பட்சத்தில் ஏற்கனவே முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையில் இருந்த திராவிட மாடல் அரசுக்கு பெயர் கிடைத்துவிடும் என்ற நோக்கத்திற்காக காலம் தாழ்த்தப்படுவதாக அரசியல் கட்சியினர் குற்றம் சாட்டுகின்றனர். இதனால், மாநகரின் போக்குவரத்து நெரிசலை குறைக்க கொண்டுவரப்பட்ட திட்டம் இறுதிக்கட்டத்தை எட்டியும் மக்கள் பயன்பாட்டிற்கு வராமல் முடங்கி கிடப்பது திருப்பூர் மக்களிடையே பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

பருவ மழைக்கு முன் திறக்கப்படுமா? முன்னெச்சரிக்கை அவசியம்!

அணைப்பாளையம் நொய்யல் ஆற்றின் தரைப்பாலத்திற்கு பதிலாக உயர்மட்ட மேம்பாலம் கட்டி முடிக்கப்பட்டு இருந்தாலும், ரயில்வே மேம்பாலத்துடன் இணைப்பதற்கான சில பணிகள் முடிவடையாமல் இருப்பதால் உயர்மட்ட பாலமும் பயன்படுத்தப்பட முடியாமல் உள்ளது. தென்மேற்கு பருவ மழை தொடங்கி மழைப்பொழிவு அதிகரித்தால் நொய்யல் ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்படும்போது அணைப்பாளையம் தரைப்பாலம் மூழ்கி போக்குவரத்து பாதிக்கக்கூடிய சூழல் உள்ளது. எனவே, அதற்கு முன்னதாக உயர்மட்ட பாலத்தை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டும் எனவும் வலியுறுத்துகின்றனர்.

திருப்பூர் மாநகரில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் மக்கள் அதிகம் கூடும் பொது இடங்களுக்கு சென்று. வெறும் விளம்பர நோக்கோடு ஆய்வு செய்வது போல ரீல்ஸ் வீடியோக்கள் எடுத்து சமூக வலைதளங்களில் பதிவிடுவதிலேயே அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். அத்தகைய விளம்பர மோகத்தை கைவிட்டு, கடந்த கால திராவிட மாடல் ஆட்சி காலத்தில் மக்களின் நலனுக்காகவும், போக்குவரத்து சிரமங்களை போக்குவதற்காக கொண்டு வரப்பட்ட முக்கிய திட்டங்களை விரைந்து முடித்து, பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதில் மக்கள் பிரதிநிதிகள் உண்மையான அக்கறையுடனும் கவனத்துடனும் செயல்பட வேண்டும். குறிப்பாக அணைபாளையம் மேம்பால பணிகளை ஆய்வு செய்து உடனடியாக முடித்து பயன்பாட்டிற்கு கொண்டுவர சம்பந்தப்பட்ட துறையினருடன் ஆய்வு கூட்டங்களை நடத்த வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

### சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில்

# அறிவிக்கப்படாத மின்வெட்டால் மக்கள் அவதி:

## த.வெ.க. எம்.எல்.ஏ.க்களை முற்றுகையிட்டு போராட்டம்!

சென்னை, மே 23-

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் அறிவிக்கப்படாத மின்வெட்டால் மக்கள் அவதியுற்ற நிலையில் த.வெ.க. எம்.எல்.ஏ.க்களை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தியதால் பரபரப்பு ஏற்பட்டது. தமிழ்நாட்டின் தலைநகரான சென்னையில் கோடை வெயிலின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில், சென்னை மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் அறிவிக்கப்படாத தொடர் மின்வெட்டு மற்றும் நள்ளிரவு நேர மின்தடைகளால் பொதுமக்கள் நரக வேதனையை அனுபவித்து வருகின்றனர்.

மின்சார வாரியத்தின் முறையற்ற திட்டமிடல் மற்றும் த.வெ.க. ஆட்சியின் அலட்சிய போக்கே இந்த நிலைக்கு காரணம் என பொதுமக்கள் மத்தியில் கடும் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது. சென்னையில் கடந்த சில வாரங்களாகவே வெயிலின் தாக்கம் உச்சத்தில் உள்ளது. பகல் நேரத்தில் சுட்டெரிக்கும் வெயிலால் மக்கள் வீடுகளுக்குள் முடங்கியிருக்கும் நிலையில், பல மணி நேரம் மின்தடை ஏற்படுத்தப்படுகிறது.

"பராமரிப்புப் பணிகள்" என்ற பெயரில் பகல் முழுதும் மின்சாரத்தை நிறுத்தும் வாரியம், இரவு நேரங்களிலும் திடீர் திடீரென 4 முதல் 5 மணி நேரம் மின்வினியோகத்தை துண்டித்து வருகிறது. இதனால், பகல் முழுவதும் உழைத்துவிட்டு இரவில் நிம்மதியாக தூங்கலாம் என்று நினைக்கும் நடுத்தர மற்றும் அடித்தட்டு மக்கள், நள்ளிரவில் மின்சாரமின்றி, புழுக்கத்தில் தூக்கத்தைத் தொலைத்து தவித்து வருகின்றனர்.

குறிப்பாக, குழந்தைகள், கர்ப்பிணிகள் மற்றும் முதியவர்கள் இந்த அவசர கால சூழலில் பெரும் அவதிக்குள்ளாகி வருகின்றனர். குறிப்பாக, கடந்த இரண்டு நாட்களாக திருவொற்றியூர், தண்டையார்பேட்டை, ராயபுரம், எண்ணூர், வேளச்சேரி, மதுரவாயல், போரூர், அய்யப்பன்தாங்கல் உள்ளிட்ட பகுதிகளில் இரவு நேரங்களில் தொடர் மின்வெட்டு ஏற்பட்டன. மின்வாரிய அதிகாரிகளை தொடர்பு கொண்டால் பேச மறுப்பதாக மக்கள் குற்றச்சாட்டை முன்வைத்தனர். இதில் திருவொற்றியூர் பகுதியில் பொதுமக்கள் நேரடியாக மின்வாரிய நிலையத்திற்கு சென்று முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர்.

இதையறிந்த திருவொற்றியூர் த.வெ.க. எம்.எல்.ஏ செந்தில் குமார் நேரில் வந்தும் ஒரு பயனும் இல்லை. எம்.எல்.ஏ போன் செய்தும் மின்வாரிய உயர் அதிகாரிகள் யாரும் அழைப்பை எடுக்காமல் இருக்க கொதித்தெழுந்த மக்கள் அவரை வார்த்தைகளால் ஷாக் அடைய வைத்தனர். இது ஒருபுறம் நடக்க ராயபுரத்தில் சாலையில் போராட்டத்தில் இறங்கிய மக்களை சமாதானப்படுத்த வந்த எம்.எல்.ஏ ராமுவிடம் இதற்கு தான் த.வெ.க.விற்கு ஓட்டு கேட்டீங்களா.

ஆட்சிக்கு வந்த 10 நாட்கள் கூட ஆகல 5 நாள் கரண்ட் கட் பண்ணீட்டாங்க என கேள்வி கணைகள் அவர் மீது மக்கள் தொடுத்தனர். பொதுவாக ஒவ்வொரு ஆண்டும் கோடைகாலத்தில் மின்சார தேவை அதிகரிக்கும் என்பது அரசுக்கும் மின்சார வாரியத்திற்கும் அப்பட்டமாக தெரிந்த விஷயமே. தற்போது ஏசி மற்றும் மின்விசிறிகளின் பயன்பாடு அதிகரித்துள்ளதால் மின்சுமை தாங்காமல் மின்மாற்றிகள் வெடிப்பதும், கேபிள்கள் பழுதடைவதும் தொடர்கதையாகி உள்ளது. இது அரசின் கவனக்குறைவு எனவும், மின் தேவையை கணிப்பதில் அரசு தவறிவிட்டதாகவும் விமர்சனம் எழுந்துள்ளன.

இந்த தொடர் மின்வெட்டு காரணமாக சிறு, குறு தொழில்கள், கடைகள் மற்றும் வணிக வளாகங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. மின்சாரத்தை மட்டுமே நம்பியிருக்கும் தையல் கடைகள், மாவு மில்கள், கணினி மையங்கள் போன்றவற்றின் அன்றாட வருமானம் முடங்கியுள்ளது. வணிகர்கள் தங்களின் வாழ்வாதாரத்தை இழந்து தவித்து வருகின்றனர். தலைநகரிலேயே இந்த அவல நிலை என்றால், மற்ற மாவட்டங்களின் நிலைமையைச் சொல்லவே வேண்டியதில்லை.

ஆட்சிக்கு வந்தவுடன் 200 யூனிட் இலவசம் என அறிவித்த விஜய். முதலில் மின்சாரத்தை பயன்படுத்தினால் தானே சலுகை கூட பெறமுடியும் அந்த மின்சாரத்தை நுகர்வோருக்கு கொடுக்கமல் இருப்பது எந்த வகையில் நியாயம் என சமூகவலைதளத்தில் கேள்விகள் எழுப்பப்பட்டு வருகின்றன. ரீல்ஸ் மோகத்தில் மூழ்கி கிடக்கும் இந்த ஆட்சி அதில் கொடுக்கும் முக்கியத்துவத்தை, மக்களின் அடிப்படை தேவையான தடையில்லா மின்சாரம் வழங்குவதில் அரசு காட்ட வேண்டும் என்பதே ஒட்டுமொத்த சென்னை மக்களின் கோரிக்கையாகவும், கண்டனமாகவும் உள்ளது.

**மின்வெட்டை கண்டித்து மக்கள் முற்றுகை:**

வண்ணாரப்பேட்டை காளிங்கராயன் தெருவில் நேற்று முன்தினம் பகல் முழுவதும் மின்சாரம் இல்லாமல் பொமக்கள் கடும் அவதிக்குள்ளாயினர். இரவு நேரம் மின்சாரம் வந்துவிடும் என்று எதிர்பார்த்த பொதுமக்கள் ஏமாற்றம் அடைந்தனர். இதனால் ஆத்திரமடைந்த 100க்கும் மேற்பட்ட பொதுமக்கள் சிமெட்ரி சாலையில் அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் அப்பகுதியில் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது.

இதுகுறித்து தகவல் அறிந்த வண்ணாரப்பேட்டை காவல் நிலைய போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று பொதுமக்களிடம் சமரசம் பேசினர். சம்பவ இடத்திற்கு வந்த ராயபுரம் எம்எல்ஏ தாமுவை பொதுமக்கள் சூழ்ந்து கொண்டு உடனடியாக மின்சாரம் வழங்க வேண்டும் என்று கோஷங்கள் எழுப்பினர். இதனால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

**மேடவாக்கத்தில் 16 மணி நேரம் மின்சாரம் துண்டிப்பு**

மேடவாக்கம் ஊராட்சிக்குட்பட்ட, பெல் நகரில் ஐந்து தெருக்கள் உள்ளன. இதில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகளில் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் வசித்து வருகின்றனர். இங்கு கடந்த இரண்டு நாட்களாக மின் தடை ஏற்பட்டுள்ளது. இதனால் இப்பகுதி மக்கள் காற்றோட்டம் இல்லாமல் தூங்க முடியாமல் அவதிக்குள்ளாகி இருப்பதாக கூறுகின்றனர். இது குறித்து அப்பகுதிவாசிகள் கூறியதாவது: மின்வாரிய அலுவலகத்திற்கு போன் செய்தால் அவர்கள் போன் எடுத்து பதில் சொல்வதில்லை.

கடந்த 16 மணி நேரத்திற்கு மேலாக மின்சாரம் இல்லாமல் அவதிப்பட்டு வருகிறோம். கோடை காலம் என்பதால் தற்போது மின்சாரம் இல்லாமல் இருப்பது மிகவும் சிரமமாக உள்ளது. குறிப்பாக குழந்தைகள் மற்றும் முதியவர்கள் பெரியளவில் பாதிக்கப்பட்டனர். இது மாதிரி அலட்சிய போக்கை கைவிட்டு பொதுமக்கள் நலன் கருதி மின்வாரிய ஊழியர்கள் செயல்பட வேண்டும்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.



கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், அகஸ்தீஸ்வரம் தெற்கு ஒன்றியம், வடக்கு தாமரைகுளம் ஊராட்சி கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் தெற்கு ஒன்றிய செயலாளர் பா.பாபு தலைமையில் மாவட்டச் செயலாளர் ரெ.மகேஷ் கழக வளர்ச்சி பணிகள் தொடர்பாக நிர்வாகிகளுக்கு ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் எட்வின், டி.பூவியூர் காமராஜ், தனசம்பத், தமிழ்மாறன், தமிழன் டி.ஜானி, ஜி.பொன் ஜான்சன், ஐயப்பன், திருமதி. ஹெப்சிபாய் உட்பட ஒன்றிய நிர்வாகிகள், கிளை கழக செயலாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் மத்திய மாவட்டக் கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன் விழுப்புரம் மத்திய மாவட்டம், விழுப்புரம் சட்டமன்ற தொகுதி, கோலியனூர் மத்திய ஒன்றியம், கழக நிர்வாகிகளுக்கு நன்றி தெரிவிக்கும் கூட்டத்தில் கலந்து கொண்டு நன்றி தெரிவித்து, சிறப்புரையாற்றினார். உடன் கோலியனூர் மத்திய ஒன்றிய கழக பொறுப்பாளர் கப்பூர் ராஜா மற்றும் ஒன்றிய கழக நிர்வாகிகள், மாவட்ட, ஒன்றிய சார்பு அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளை கழக நிர்வாகிகள், BLA 2, BDA, BLC மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.